# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 098/மா/2018

ஆணை எண். 120/2018

நாள் : 10/05/2018

திரு K. தங்கராஜன்,
சேலம். – முறையீட்டு மனுதாரர்

இணை இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
சேலம் – 636 001. – எதிர் மனுதாரர்

சேலம் மாநகராட்சி, அழகாபுரம் புதூர், அருண் நகர், எண்.132, பாரதி தெரு முகவரியில் வசிக்கும் திரு K. தங்கராஜன் அவர்களின் 03.05.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 07.05.2018 அன்று பெறப்பட்டு, 098/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் பிற ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாநகராட்சி, அழகாபுரம் புதூர், அருண் நகர், எண்.132, பாரதி தெரு முகவரியில் வசிக்கும் திரு K. தங்கராஜன் என்பவர்,28.09.1998 நாளிட்ட நிதித்துறை அரசாணை எண்.562–இன் படி சிறப்பு நிலையில் 18 ஆண்டுகள் பணி முடித்த தனக்கு ஒரு போனஸ் ஊதிய உயர்வு வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைக் குறித்து 12.07.2017 நாளிட்ட சூரமங்கல மண்டலம், உதவி ஆணையரின் கடிதம் எண்.1329/கே 2/13–இல் சேலம், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை துணை இயக்குநருக்கு உரிய கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், துப்புரவு ஆய்வாளர் பணியிடத்தில் பணியாற்றிய பிற அலுவலர்களுக்கு போனஸ் ஊதிய உயர்வு வழங்கியது போல் தனக்கும் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்று ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. சிறப்பு நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய தனக்கு ஒரு போனஸ் ஊதிய உயர்வு வழங்கக் கோரிய கருத்துரு சேலம், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிகிறது. 28.09.1998 நாளிட்ட நிதித்துறை அரசாணை எண்.562ன–இல் சிறப்பு நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர்களுக்கு ஒரு போனஸ் ஊதிய உயர்வு வழங்கக் கீழ்க்காணும் ஆணையினையும் வெளியிட்டுள்ளது :-

"Government direct that employees stagnating in the post beyond 30 years i.e. employees stagnating in the Special Grade beyond 10 years be granted with one bonus increment as an incentive."

எனவே, முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைக் குறித்த கருத்துரு சேலம், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை துணை இயக்குநரின் பரிசீலனையில் உள்ள நிலையில், அக்கருத்துருவின் மீது உரிய ஒப்புதலினைப் பெற விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சூரமங்கலம் உதவி ஆணையாளர் அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மே திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

2. துணை இயக்குநர்,
உள்ளாட்சிகளின் நிதித்தணிக்கைத் துறை,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

3. திரு K. தங்கராஜன்,
132, பாரதி தெரு,
அருண்நகர், அழகாபுரம் புதூர்,
சேலம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்